54rDEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II TIRUPPUR.
**CC No. 571/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of Witness for | | | Prosecution | : | PW– 1 |
| | | | Defence | : | |
| Name | : | முத்துலட்சுமி | Court | : | JM–2 |
| Father's/ Husband's Name | : | தண்டியப்பன் | Occupation | | |
| village | : | | Age | : | |
| Taluk | : | | | : | |

Solemnly affirmed in accourdance with the provisions of act X of 1873 of the day of
**எதிரி ஆஜர்.**

**முதல்விசாரணை** **நாள் – 14.05.2025**

1. நான் KVR நகரில் குடியிருந்து வருகிறேன். பிரிண்டிங் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கு வாகன விபத்தில் இறந்த தண்டியப்பன் எனது கணவர் ஆவார். எனது கணவர் தண்டியப்பன் மணிகண்டன் என்பவரிடம் லோடு மேன் வேலை பார்த்து வந்தார். கடந்த 03.09.2023 ம் தேதி காலை 07.30 மணியளவில் வீட்டிலிருந்த புறப்பட்டு வேலைக்கு சென்றார். பின்பு 07.50 மணியளவில் என் கணவருடன் வேலை பார்க்கும் வாசிமலை என்பவர் எனது மகன் சூரியபிரகாஷிற்கு போன் செய்து எனது கணவர் வாசிமலை, பிச்சையா ஆகியோருடன் ஈஸ்வரன் என்பவர் டிராக்டர் வாகனத்தை ஓட்ட அவர்களுடன் உஷா தியேட்டர் அருகே மண் லோடு எடுக்க சென்றதாகவும், டிராக்டரில் அதன் ஓட்டுநர் திருப்பும் பொழுது டிராக்டரிலிருந்து கீழே விழுந்ததாகவும் உயிர் நாடியிலும் முதுகிலும் எனது கணவருக்கு அடிபட்டதாகவும் தகவல் தெரிவித்தார். நான் தகவல் தெரிந்து எனது மகன் சூரியபிரகாஷிடம் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபொழுது முதுகிலும் உயிர் நாடியிலும் அடிபட்டிருந்தது. பின்னர் அவர் காலை 10.15 மணிக்கு இறந்து விட்டார். எனக்கு எழுத படிக்க தெரியாத காரணத்தினால் எனது மகன் சூரியபிரகாஷ் புகார் எழுதி கொடுக்க நான் கை ரேகை வைத்து கொடுத்தேன். புகாரில் உள்ள கைரேகை நான் வைத்தது. மேற்படி (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் பிரேத

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI1A0078562024/truecopy/order-1.pdf

விசாரணையின் போது நான் உடனிருந்து எனது கணவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இழப்பீடு தொகை பெறுவதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

NADIA FATHIMA
Digitally signed by NADIA FATHIMA
Date: 2025.05.14 15:53:13 +0530

Judicial Magistrate No.II,
Tiruppur.

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTI1A0078562024/truecopy/order-1.pdf